Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 16/2013

Deposition of witness for: PW - 10

| | | | |
|---|---|---|---|
| Name | : மாடசாமி | Father/Husband Name | : குழந்தைவேல் |
| Age | : | Calling | : |
| Date | : 29.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 29 day of 06.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மதுரை மீனாட்சி அம்மன் கோவில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஏற்கனவே 2012 ம் ஆண்டு மேலூர் சார்பு ஆய்வாளரர் பாஸ்கர் மேலூர் காவல் நிலைய பொறுப்பில் 23.10.2010 ம் தேதி வடிவேல் என்பவர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மேலூர் காவல் நிலைய குற்ற எண் 1003/2010 பிரிவுகள் 279, 337, 304(A) இதசன்படி வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் என்பவரிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்துள்ளார். காவல் ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் வழக்க கோப்பை தனது புலன்விசாரணை முடித்து முதற்கட்ட புலன்விசாரணை முடித்து பணி மாறுதலில் சென்றுவிட்டதனால் அதன்பிறகு 07.02.2011 ம் தேதி மேலூர் வட்ட காவல் ஆய்வாளராக பொறுப்பேற்றுக்கொண்ட நான் மேற்படி வழக்கை தொடர் புலன்விசாரணைக்கு 17.02.2011 ம் தேதி எடுத்துக்கொண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சக்திவேல் அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கில் காயம்பட்ட ராம்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர் திரு.பகத்சிங் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(காயம்பட்ட ராம்குமாருக்கு வழங்கிய காயச்சான்று அசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

இவ்வழக்கில் காயம்பட்ட சாமிகண்ணு என்பவருக்கு சிகிச்சை அளித்த மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர் திரு.தீனதயாளன் என்பவரை விசாரித்து சிகிச்சை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த சாமிகண்ணனின் சிகிச்சை சான்று அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

இவ்வழக்கில் காயம்பட்டு இறந்துபோன முருகானந்தம் மற்றும் செல்வராஜ் ஆகியோர்களை பிரேத கூராய்வு மேற்கொண்ட பிரேத கூராய்வு அறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் பாஸ்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து அன்றையதினமே எதிரி மீது பிரிவுகள் 279, 337, 304(A) இதசவின்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கில் நான் எந்த சாட்சியையும் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தேன் மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சாட்சிகளை விசாரித்தேன் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று நான் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் பார்வை மகஜர்

சாட்சிகளை தவிர அனைவரும் விபத்தில் இறந்தவர்களின் உறவினர்கள் என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் இறந்வர்களின் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான், சாட்சிகள் அனைவரும் விபத்தை நேரில் பார்த்தவர், விபத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவார்கள். இவ்வழக்கின் புகார்தாரர் வடிவேல் என்றால் சரிதான். புகார்தாரருக்கு விபத்து காயம் ஏற்படட்தாகவும், அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, அவர் மேலூர் அரசு மருத்துவனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதாக சொல்லியுள்ளார். அதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) மருத்துவர் வெங்கடாச்சலம் என்பவர் புகார்தாரர் மருத்துவமனைக்கு வந்ததாகவும், அவருக்கு தான் சிகிச்சை அளித்ததாகவும் எனத விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட ராம்குமார் மற்றும் சாமிகண்ணு ஆகியோர்களை தங்கபாண்டி என்பவரை சேர்த்தாக குறிப்பிடப்பட்டுள்ளது அவரை நான் சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை. அசாஆ 12 சாமிகண்ணு மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து சான்று வழங்க இயலாது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவ இடம் சென்று ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். அவர் வழங்கிய வாகன ஆய்வறிக்கையிலும் டயர் உராய்வு குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அசாஆ 4 ஆவணத்தில் வாகனத்தின் வலது முன் கதவு சேதம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் எதிரிக்கு விபத்து நடந்த தேதியிலிருந்து 26 வருடத்திற்கு முன்னரே ஒட்டுனர் உரிமம் இருந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்று அசாஆ 5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவர் இறந்துவிட்டதால் அவருடைய ஒட்டுனர் உரிமத்தை கொடுக்கவில்லை. அவர் இறந்துவிட்டதால் ஒட்டுனர் உரிமம் கொடுக்கவில்லை என்று குற்ற இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் திருச்சியிலிருந்து மதுரை நோக்கி வரும் ரோட்டில் திரும்பும் இடத்தில் விபத்து நடந்ததாக உள்ளது என்றால் சரிதான். ரோட்டின் மத்திய தடுப்பு சுவர் அருகே விபத்து நடந்துள்ளது என்றால் சரிதான்.

3) எதிரி ஒட்டி வந்த பேருந்தில் வந்த பயணிகளை மற்றும் நடத்துனரை சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை. அதேபோல் திருப்பத்தூர் பாலத்தில் ஏறி, இறங்கும் இடத்தில் விபத்து நடந்தது என்றால் இல்லை. பிரேத விசாரணைக்கு இறந்தவர்களின் உடலை எடுத்து சென்ற செல்வராஜ் மற்றும் பாண்டி ஆகிய காவலர்களை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் சொன்னதுபோல் அரசு பேருந்தை ஒட்டிய வந்த எதிரியின் அஜாக்கிரதையாலும், அதிவேகமாக வந்ததனால் விபத்து ஏற்படவில்லை, டாடா சுமோ ஒட்டி வந்த விபத்தில் இறந்த முருகானந்தம் தான் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கி வந்து விபத்து ஏற்படுத்தி உள்ளார், இவ்வழக்கின் எதிரிக்கும் விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை, அரசு பேருந்தை பயணிகளுடன் அதிவேகமாக திரும்ப முடியாது, டாடா சுமோவில் வந்தவர்கள் இறந்துவிட்டதனால் அவர்களுக்கு இழப்பீடு பெறுவதற்கு எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.